# 45. எண்ணலங்கார லகரி*.

112

**பண் - இந்தளம்.**

ஒன்றா மவ ரோதிய தாதிமுகம்
ஒன்றா மவர் சூர னுடம்பெறிவேல்
ஒன்றா மவ ருன்னத ஞானகதி
ஒன்றா மவ ருண்மை வியாபகமே. 1

---

* ***லகரி*** = *இடைவிடாதோடிக் கொண்டிருக்கும் பிரவாகம்.*

**இ**ரண்டா மவ ராடெழி லேறுகழல்
இரண்டா மவ ரேசறு தேவிவகை
இரண்டா மவ ரேறிள மஞ்ஞை விழி
இரண்டா மவ ரேர்க்கொடி வீயடியே. 2

**மூ**ன்றா மவர் சொல்லிய மூத்ததமிழ்
மூன்றா மவர் தம்முக மொன்றுவிழி
மூன்றா மவர் முத்திகொ ளான்மவகை
மூன்றா மவர் மொய்ம்புர மின்னூலே. 3

**நா**ன்கா மவர் நல்கிய நாதமறை
நான்கா மவ ராகம நற்பிரிவு
நான்கா மவ ரூரு நறுந்தகர்க்கால்
நான்கா மவர் நட்பி னருள்வரமே. 4

**ஐ**ந்தா மவ ராற்று மருங்கருமம்
ஐந்தா மவ ராணைசெய் பாசவகை
ஐந்தா மவ ராறற வோர்க்குணர்த்தல்
ஐந்தா மவ ரால்விரி பூதமரோ. 5

**ஆ**றா மவ ரானன மென்றறைதல்
ஆறா மவ ருண்ட முகைச்சியரெண்
ஆறா மவர் முக்கிய மான தலம்
ஆறா மவர் மந்திர வக்கரமே. 6

**ஏ**ழா மவ ரெண்ண மிழைத்தகடல்
ஏழா மவர் சிட்டியி லேதோற்றம்
ஏழா மவ ரேர்க்கொடி யானவனா
ஏழா மவ ரின்னிசை யின்சுரமே. 7

**எ**ட்டா மவ ரூழியப் பாலரினம்
எட்டா மவர் குட்டு மிருஞ்சிரன்கண்
எட்டாமவ ரின்சிவ யோகாங்கம்
எட்டா மவ ரீறி னெடுங்குணமே. 8

4. ***வரம்*** = *கனமின்மை, கண்டிப்பின்மை, கேடின்மை, விளக்கமெனவாம்.*

**ஒ**ன்பா னவ ரைத்தொழு துய்வீரா்
ஒன்பா னவ ருத்திசொல் காதைரசம்
ஒன்பா னவா் நூபுர முற்றமணி
ஒன்பா னவ ராணை யுலாங்கோளே. 9

**ப**த்தா மவ ரைச்சிந்தை பண்ணுதிசை
பத்தா மவ ருக்கிதிற் பாடுகவி
பத்தா படி யாயென் றவா்சொனசம்
பத்தாா் புகழ்ப் பாவலா் தேவவரே. 10

மன்மத வருடம் ஐப்பசி மாதம் 2ஆம் தேதி குருவாரம்.